## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம் - 2023

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3698 எஸ்ஆர்ஐ மற்றும் 3699 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர்கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் களனி, ரஜரட்ட, சபரகமுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,400 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் அதில் ரூபா 23,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 3,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 இல் முற்திகதியிடப்பட்ட நிதியளிப்பின் கீழ் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் 2023 ஆம் ஆண்டிற்கான செலவினக்கூற்றையும் அத்திகதியில் முடியவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான கட்டிடங்களை நிர்மாணிக்கும் பணி 2023 யூலை 22 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டு 2024 ஒக்தோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 36 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னர் 2024 சனவரி 31 இல் உள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. எனவே, 64 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கணிசமான அளவு மிகுதி பணி மீதமுள்ள ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கொவிட்-19 தொற்றுநோய், ஸ்திரமற்ற பொருளாதார சூழல், வெளிநாட்டு நாணய தளம்பல்கள், பணவீக்கம், இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் விநியோக வரம்புகள் ஆகியவற்றுடன் இலங்கையின் நிர்மாணத் துறையை கடுமையாகப் பாதித்தது. இந்த காலப்பகுதியில் பெரும்பாலான ஒப்பந்ததாரர்கள் காசுப்பாய்ச்சல்கள் பிரச்சனைகளை எதிர்கொண்டனர். | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட 87.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 145 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 50.26 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 72.89 மில்லியன் மாத்திரமே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கிய திகதியிலிருந்து 05 ஆண்டுகள் மற்றும் 8 மாதங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதிகள் மீது ரூபா 176 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 795,741 கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. எனவே கடன் மீதியில் 49.73 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 72.11 மில்லியன் மிகுதி செயற்திட்டக் காலப்பகுதியான 18 மாதங்களுக்குள் பயன்படுத்தப்படுவது கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது. | கடன் நிதியானது நிர்மாண பணிகள், பொருட்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான ஐ.அ.டொலர் 129.7 மில்லியன் மற்றும் கடன் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களுக்கான ஐ.அ.டொலர் 15.3 மில்லியன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஒதுக்கப்பட்ட ரூபா 129.7 மில்லியன் கடன் நிதியில் ரூபா 97.22 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீதமுள்ள ஒப்பந்த வழங்கல் செயற்திட்ட காலப்பகுதியினுள் (2024 திசெம்பர் 31) பூர்த்தி செய்யப்படலாம். மேலும் கடன் இறுதி திகதியான 2025 யூன் 30 வரை பணவளிப்புக்களை பூர்த்தி செய்ய முடியும். எனவே, மொத்த செயற்திட்ட நிதியையும் 2025 யூன் 30 அளவில் பயன்படுத்தலாம். | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு ரூபா 17 மில்லியன் கிரயத்தில் 1,098 எண்ணிக்கையான நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 1,095 புத்தகங்கள் கொள்வனவு செய்த திகதியிலிருந்து 2023 நவம்பர் 30 வரை வாசகர்களுக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் (IESL) பிரகாரம் வாஷிங்டன் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களின் பௌதீக பிரதிகள் அவசியமாகும். கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, மாணவர்கள் ஒன்லைன் கற்பித்தல் முறைகளை ஏற்றுக்கொண்டனர், இது தொற்றுநோய்க்குப் பின்னரும் தொடர்ந்தது. மத்தேகொடவில் உள்ள பொறியியல் பீட கட்டிடங்கள் பூர்த்தியடைந்தவுடன், மாணவர் உட்சேர்க்கை ஒரு குழுவிற்கு 400 படி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் அவர்களின் பயன்பாட்டுக்காக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | விளைவற்றிருக்காமல் செயற்திட்ட வளங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிர்மாணிக்கும் முக்கிய நோக்கமானது 2023 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல் பீடத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதை 120 முதல் 400 வரை அதிகரிப்பதாகும். எனினும், செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் பீடத்தை பூர்த்திசெய்வதில் தாமதம் ஏற்பட்டதால் தற்போது 180 மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகம் 2023 யூலை மற்றும் 2024 பெப்ரவரிக்கு இடையிலான தாமதமடைந்த காலப்பகுதிக்கு பொறியியல் பீடத்தை நடாத்துவதற்கான வாடகைக் கட்டிடத்திற்கான வாடகைக் கட்டணமாக ரூபா 19 மில்லியன் தொகையை செலுத்த வேண்டியிருந்தது. | தொழில்தருநர்களின் தேவையில் (ER) குறிப்பிட்டுள்ளவாறு மாணவர் சேர்க்கை படிப்படியாக அதிகரிக்க வேண்டும். எனினும், மேலதிக உட்கட்டமைப்பு அல்லது மனித வளங்கள் இல்லாமல், தற்போதைய அதிகபட்ச திறனைப் பயன்படுத்தி, கடந்த சில ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை 120 இலிருந்து 180 வரை ஏற்கனவே அதிகரித்துள்ளது. பதவியணியினர் ஒதுக்கீடு மற்றும் ஆய்வுகூட இடங்கள் போன்ற மேலதிக வளமூலங்கள் இல்லாமல் மேலதிக அதிகரிப்பு சாத்தியமற்றிருந்தது. | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இச்செயற்திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப பீடத்திற்கான நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்ததில், 118 வகையான புத்தகங்களைச் சேர்ந்த 421 அலகுகள் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமல் முன் அனுபவம் இல்லாத வழங்குநர் ஒருவரை தெரிவுசெய்து மொத்த கொள்வனவில் 76 | இது தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகம் பூர்வாங்க விசாரணையை மேற்கொண்டு பல்கலைக்கழக பேரவை மற்றும் அரசாங்க கணக்காய்வாளரிடம் அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. மேலும், கல்வி | விசாரணையை துரிதப்படுத்துவதற்கும், பொறுப்பான தரப்பினரிடமிருந்து நிதி இழப்பை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் அல்லது ரூபா 20 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 7.6 மில்லியன் பெறுமதியான 33 வகையான புத்தகங்களிற்குரிய 114அலகுகள் பயன்படுத்தப்பட்டன. அதேபோன்று பாடத்திட்டத்துடன் தொடர்பில்லாத 69 வகையான புத்தகங்களின் 179 அலகுகள் ரூபா 7 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த பெறுகையின் போது சர்வதேச சந்தையில் பழைய மற்றும் புதிய புத்தகங்கள் விற்கப்படும் குறைந்தபட்ச விலையை விட 63 வகையான புத்தகங்களின் 227 அலகுகள் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டதால் ரூபா 12 மில்லியன் நிதி இழப்பு ஏற்பட்டது. | அமைச்சு COPE இன் வழிகாட்டலைப் பின்பற்றி ஒரு குழுவை நியமித்துள்ளது, மேலும் குழு 2024 யூன் 11 இல் பல்கலைக்கழகத்திற்குச் சென்று விசாரணையை நடாத்தியது. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட பூர்த்திசெய்தல் திகதி 2023 திசெம்பர் 31 ஆக இருந்தது. இது 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், மொறட்டுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கான ஆய்வுகூட கட்டிட வளாகத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கெல்லையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. இது 2025 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே, மேலே குறிப்பிட்டுள்ள புதிய நோக்கெல்லையின் காலப்பகுதி செயற்திட்ட பூர்த்திசெய்தல் திகதியான 2024 திசெம்பர் 31 இற்கு அப்பால் உள்ளது. | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான ஆய்வுகூட கட்டிடத் தொகுதி நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கெல்லைக்கு புதிதாக சேர்க்கப்பட்டு 2024 ஏப்ரல் 24 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்த காலப்பகுதி ஒரு வருடமாகும், ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். செயற்திட்டம் முடிவடையும் திகதியான 2024 திசெம்பர் 31 வரை ஒப்பந்தங்கள் வழங்கப்படலாம், மேலும் கடன் முடிவடையும் திகதியான 2025 யூன் 30 வரை பணவளிப்பு மேற்கொள்ளப்படலாம். எனவே, பட்டியலிடப்பட்ட பூர்த்திசெய்தல் திகதி வரை நிர்மாணத்தைத் தொடர்வதில் சிக்கல் இருக்காது. | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |